2020-ம் வருடம் டிசம்பர் மாதம் 30-ம் தேதி புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1. இந்நகராட்சியில் கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு மூன்றாண்டு குத்தகை காலம் 31-03-2021 உடன் முடிவடைவதால் 01-04-2021 முதல் 31-03-2024 வரையிலான மூன்றாண்டுகளுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ | குத்தகை இனம் | சொத்து மதிப்பு சான்று 01-01-2021க்கு பிறகு பெறப்பட்டது ரூ. | சொத்துமதிப்பு சான்றிதழுடன் கட்ட வேண்டிய டேவணித் தொகை வங்கி வரைவோலை ரூ. | சொத்துமதிப்பு சான்றிதழ் அல்லாதவர் கட்ட வேண்டிய டேவணித் தொகை வங்கி வரைவோலை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஆம்பூர் நகராட்சியில் பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு நுழைவு ( Toll ) கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை | 75,000/- | 10,00,000/- | 1,50,000/- |
| 2 | ஆம்பூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமை | 10,000/- | 1,00,000/- | 20,000/- |
| 3 | தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920. 270வது பிரிவின்படி ஆம்பூர் நகராட்சி சாலை ஓரங்களில் வியபாரம் செய்வதை ஒழுங்கு படுத்தி சுங்கம் வசூல் செய்யும் உரிமை | 20,000/- | 2,00,000/- | 30,000/- |
| 4 | ஆம்பூர் நகராட்சியில் மாடு அறுக்கும் இடத்தில் சுங்கம் வசூல் செய்துகொள்ளும் உரிமை | 2,000/- | 20,000/- | 5,000/- |
| 5 | ஆம்பூர் நகராட்சியில் ஆடு அறுக்கும் இடத்தில் சுங்கம் வசூல் செய்து கொள்ளும் உரிமை | 50,000/- | 1,50,000/- | 75,000/- |
| 6 | ஆம்பூர் நகராட்சியில் வார சந்தை கூடும் இடத்தில் சுங்கம் வசூல் செய்துகொள்ளும் உரிமை | 5,000/- | 20,000/- | 10,000/- |
| 7 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆசனாம்பட்டு பகுதியில் உள்ள 13 எண்ணிக்கை உள்ள புளியமர மகசூல் செய்துகொள்ளும் உரிமை | --- | --- | 1,500/- |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகளுக்கு தனித்தனியே வைப்புத்தொகை செலுத்தி ஏலம் கோரவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மற்றும் தேவைப்படும் ஏல அறிவிப்புகளை அச்சடித்துக் கொள்வதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 1707/2020/அ3

தீர்மான எண்.122:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந்நகராட்சிக்கு தேவையான சொத்துவரி குடிநீர் கட்டணம், தொழில் வரி, மற்றும் வரியில்லா இனங்களின் வரி செலுத்தும் கணினி இரசீதுகள், பிறப்பு சான்று படிவங்கள், பதிவேடுகள், இருப்பில் A4 Paper மற்றும் Tonner-கள் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் மேற்படி பொருட்களை வடாற்காடு மாவட்ட சிறுதொழில் கூட்டுறவு அச்சகம் லிட், வேலூர் (Napco Ltd Vellore) அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.3.00இலட்சத்திற்க்கு, பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>-அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.433/பி3/2018.

தீர்மான எண்.123:- அனுமதிக்கப்பட்டது.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி 110–இன் கீழ் 19.03.2020 அன்று வெளியிட்ட அறிவிப்பில் “ மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் மற்றும் யோகா மையம் அமைக்கப்படும்” என தெரிவித்துள்ளார். அரசாணை (4ப) எண். 6 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள். 03.09.2020–ல் மாநகராட்சி, நகராட்சிகளில் போதிய இடவசதி உள்ள மாநகராட்சி / நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் மற்றும் யோகா மையம் பொது நிறுவனங்கள், தனியார் பங்களிப்பு மற்றும் உள்ளாட்சி பொதுநிதியின் மூலம் பணியை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5060/பிபிசி/2020, நாள்: 17.10.2020. கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட கன்னிகாபுரம் பகுதி வார்டு எண்.எ, பிளாக். எண்.08, நகரளவு எண்.3/3,3/4 மற்றும் 4/3–ல் உள்ள பூங்காவில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைத்தல் பணிகளை மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட கன்னிகாபுரம் பகுதி வார்டு எண்.எ, பிளாக். எண்.08, நகரளவு எண்.3/3,3/4 மற்றும் 4/3–ல் உள்ள பூங்காவில் திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் அமைத்தல் பணி. | 10.00 |
| 2 | ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட கன்னிகாபுரம் பகுதி வார்டு எண்.எ, பிளாக். எண்.08, நகரளவு எண்.3/3,3/4 மற்றும் 4/3–ல் உள்ள பூங்காவில் யோகா மையம் அமைத்தல் பணி. | 13.00 |
| | மொத்தம் | 23.00 |

அலுவலக குறிப்பு– அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்,

ந,க,எண்.1450/இ1/2020

தீர்மான எண்.124:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**4.** இந் நகராட்சியில் 2020-2021-ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்க்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டு வரப்பெற்றுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.அ4/1070/2020 நாள்.23.11.2020 மற்றும் 28.04.2020-ஐ தகவலுக்கு வைக்கப்படுகின்றது.

| எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ருபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு,எண்.26 கோட்டை பங்களா தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 6.40 |
| 2 | வார்டு எண்.1–ல் மளிகை தோப்பு குறுக்கு தெருக்களில் அபீப் மசூதி அருகில் ஏற்கனவே உள்ள கால்வாயின் மீது பழுதடைந்துள்ள RCC சிமெண்ட் சிலாப்பினை அகற்றி Pre cast சிலாப் அமைத்தல். | 8.80 |
| 3 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பை–பாஸ் சாலையில் முருகன் திரையரங்கம் முதல் பாலாறு மேம்பாலம் வரையில் 6 எண்ணிக்கை LED தெரு விளக்குகள் அமைத்தல். | 7.60 |
| 4 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட ரத்னா நகர்,ஷராப் பஜார் முதல் கஸ்பா,அ.பெண்கள் மேல் நிலைப்பள்ளி வரை மற்றும் வார்டு எண்,2 &8 ஆகிய இடங்களில் 50 எண்ணிக்கை 80 watts LED தெருவிளக்குகள் அமைத்தல். | 7.00 |

மேற்படி பணிகளுக்கு 23.12.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு,எண்.26 கோட்டை பங்களா தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 6.40 | 1.எம்.தீனதயாளன்<br><br>2.எஸ்.அருணாசலம் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br>1.20% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | வார்டு எண்.1–ல் மளிகை தோப்பு குறுக்கு தெருக்களில் அபீப் மசூதி அருகில் ஏற்கனவே உள்ள கால்வாயின் மீது பழுதடைந்துள்ள RCC சிமெண்ட் சிலாப்பினை அகற்றி Pre cast சிலாப் அமைத்தல். | 8.80 | 1.எம்.தீனதயாளன்<br><br>2.எஸ்.அருணாசலம் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br>1.10% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பை–பாஸ் சாலையில் முருகன் திரையரங்கம் முதல் பாலாறு மேம்பாலம் வரையில் 6 எண்ணிக்கை LED தெரு விளக்குகள் அமைத்தல். | 7.60 | 1.M/S,ராயல் ஏஜென்சீஸ், வேலூர்.<br><br>2.M/S.இண்டியன் ஏஜென்சீஸ், வேலூர். | 0.24% மதிப்பீட்டைவிட குறைவு<br>0.73% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 4 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட ரத்னா நகர்,ஷராப் பஜார் முதல் கஸ்பா,அ.பெண்கள் மேல் நிலைப்பள்ளி வரை மற்றும் வார்டு எண்,2 &8 ஆகிய இடங்களில் 50 எண்ணிக்கை 80 watts LED தெருவிளக்குகள் அமைத்தல். | 7.00 | 1.M/S,ராயல் ஏஜென்சீஸ், வேலூர்.<br><br>.M/S.இண்டியன் ஏஜென்சீஸ், வேலூர். | 0.24% மதிப்பீட்டைவிட குறைவு<br>0.73% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: அ. பதிவு செய்யலாம்.
ஆ. வரிசை எண்.1 மற்றும் 2-ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம்.தீனதயாளன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ஆ.வரிசை எணி.3-மற்றும் 4-ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் M/S,ராயல் ஏஜென்சீஸ், வேலூர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.1577/2020/இ1
தீர்மான எண்.125:- பதிவு செய்யப்பட்டது.அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**4.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி **110**–இன் கீழ் **19.03.2020** அன்று வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க, ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட கன்னிகாபுரம் பகுதி வார்டு எண்.எ, பிளாக். எண்.**08**, நகரளவு எண்.**3/3,3/4** மற்றும் **4/3**–ல் உள்ள பூங்காவில் திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்க எடுத்துக்கொள்ளப்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு **18.12.2020**–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் திரு. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட கன்னிகாபுரம் பகுதி வார்டு எண்.எ, பிளாக். எண்.08, நகரளவு எண்.3/3,3/4 மற்றும் 4/3–ல் உள்ள பூங்காவில் திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் அமைத்தல் பணி. | 10.00 | 1. எம்.தீனதயாளன்<br>2.எஸ்.அருணாசலம் | 0.53% மதிப்பீட்டை விட குறைவு<br>0.22 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட கன்னிகாபுரம் பகுதி வார்டு எண்.எ, பிளாக். எண்.08, நகரளவு எண்.3/3,3/4 மற்றும் 4/3–ல் உள்ள பூங்காவில் யோகா மையம் அமைத்தல் பணி. | 13.00 | 1. எம்.தீனதயாளன்<br>2.எஸ்.அருணாசலம் | 0.74% மதிப்பீட்டை விட குறைவு<br>0.41 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு– வரிசை எண்,1 மற்றும் 2–ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எம்.தீனதயாளன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ந,க,எண்.1450/இ1/2020

தீர்மான எண்.126:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6.. இந் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் மற்றும் அலுவலகத்திற்கு வருகின்ற பொதுமக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டி, அலுவலகத்தில் இரண்டு இடங்களில் 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் உபகரணங்கள் (R.O. Cold & Hot water) அமைக்கவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.2.40 இலட்சத்திற்கும் (ரூபாய்.இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலவக குறிப்பு:-அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந,க,எண். 1716/இ1/2020

தீர்மான எண்.127:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட எம்.சி.சாலையான தேசிய நெடுஞ்சாலை சந்திப்பு முதல் பெத்லகேம் இரயில்வே பாலம் வரையில் புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைக்கவும், மிஷன் காம்பவுண்ட் சாலை மற்றும் இரயில்வே பாலம் அருகில் பாலம் மற்றும் இரும்பு கிரில் அமைக்கவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.9.40 இலட்சத்திற்கும் (ரூபாய்.ஒன்பது லட்சத்து நாற்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலவக குறிப்பு:-அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந,க,எண்.1717/இ1/2020

தீர்மான எண்.128:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**8.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு, மலேரியா, சிக்குன்குன்யா மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவல் தடுப்பு முன்எச்சரிக்கை நடவடிக்கையினை மேற்கொள்ளவும், பொது சுகாதாரத்தினை காத்திடவும், கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள, 80 கொசு ஒழிப்பு பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் திருப்பத்தூர் அவர்கள் நிர்ணயம் செய்த தினக் கூலி அடிப்படையில், 4 மாதங்களுக்கு பணிஅமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் தோரய செலவினத் தொகை ரூ.35.00 இலட்சத்திற்கும் (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u> (அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ)மேற்படி பணிக்காகும் தோரய செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1070/எச்1/2020

தீர்மான எண்.129:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**9.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு, மலோரியா, சிக்குன் குன்யா மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவல் தடுப்பு முன்எச்சரிக்கை நடவடிக்கையினை மேற்கொள்ள 80 DBC பணியாளர்களை சப்ளை செய்யும் பணிக்கு 29.12.2020ம் தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தாரர் பெயர் மற்றும் முகவரி | விவரம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.S.லோகேஷ்<br>L.D.Manpowersolutions<br>PVT.LTD Vellore. | நாள் ஒன்றுக்கு<br>ஒரு நபருக்கு | 367/– |
| 2 | திரு.G.பிரபாகரன்<br>அன்னை ராமபாய் தெரு<br>கஸ்பா A ஆம்பூர் | நாள் ஒன்றுக்கு<br>ஒரு நபருக்கு | 370/– |

<u>அலுவலக குறிப்பு:–</u>

(அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.லோகேஷ். L.D.Manpower solutions PVT.LTD Vellore வழங்கிய குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1070/எச்1/2020

தீர்மான எண்.130:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**10.** இந்நகராட்சி பொதுசுகாதாரபணியான திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தினக்கூலி பணியாளர்கள் 210 நபர்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயித்த விலைவிகிதத்தின் அடிப்படையில் L.D MANPOWER SOLUTION PVT.LTD VELLORE என்ற நிறுவனம் மூலம் பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது. மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தமானது 30.09.2020ம் தேதியுடன் முடிவுபெற்றது. மேலும் மேற்படி பணிக்கு பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் 12.08.2020ம் தேதியன்று அனுப்பப்பட்டது, மேற்படி பொருள் குறித்து உத்திரவு பெறப்படாத நிலையில், போதிய கால அவகாசம் இல்லாததால் 3 மாதக்காலத்திற்கு, ஏற்கனவே மேற்படி பணி மேற்கொண்டு வரும் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வரப்பெற்றது. மேலும் மேற்படி பொருள் குறித்து எவ்வித

உத்திரவும் பெறப்படாத நிலையில், திடக்கழிவு மேலாண்மை பணியின் அத்தியாவசியத்தை கருதி திடக்கழிவு மேலாண்மை பணியினை தொய்வின்றி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கு தற்போது ஆட்களை சப்ளை செய்யும் நிறுவனம் மூலமே மேலும் **3** மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பணியாளர்களை சப்ளை செய்ய வேண்டி மேற்படி நிறுவனத்திற்கு **3** மாதகாலத்திற்கு பணிநீட்டிப்பு செய்ய மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

(அ) திடக்கழிவு மேலாண்மை பணி அத்தியாவசிய பணி என்பதல் அவசரம் அவசிம் கருதி **3** மாதக் காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணிமேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(ஆ)மேற்படி பணிக்காகும் தோராய செலவினத் தொகை ரூ.**81.00** இலட்சத்தினை (ரூபாய் எண்பத்தோரு இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.**695**/எச்**1/2018.**

தீர்மான எண்.131:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**11.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2021 –ஆம் ஆண்டு கோடை வறட்சி காலத்தில் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வியோகம் செய்ய இந்நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் பழுதடைந்துள்ள மின்மோட்டார் மற்றும் இதர மின் உதிரி பாகங்களை அகற்றி புதியதாக 7.50 எச்.பி மற்றும் 1.50 எச்.பி மின்மோட்டார் மற்றும் இதர மின் உதிரி பாகங்களை சப்ளை செய்து பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 10.00 இலட்சத்திற்க்கு (பத்து இலட்சம் மட்டும்) அங்கிகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

1. அங்கிகாரம் வழங்கலாம்.
2. மேற்படி பணியினை குடிநீர் நிதி தலைப்பின் கீழோ அல்லது அரசின் எதிர்வரும் வறட்சி நிவாரண திட்ட நிதியிலிருந்தோ மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண். 1565/2020/இ2**

தீர்மான எண்.132:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி